18.02.2025 SC.No.55/2017

சாட்சி : PW 4 காளியம்மாள்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை :**

1.நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் வந்து முதல் விசாரணையில் வந்து சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு ஞாபகம் உள்ளதா எனறால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை, பின்னர் சாட்சி ஞாபகம் உள்ளதாக கூறினார். எரிந்ததாக சொல்லப்படும் குடிசைக்கும் எங்கள் வீட்டிற்கும் இடையே எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் அது முத்துாரணியில் உள்ளது. எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமாராக 200 மீ துாரம் இருக்கும். அந்த குடிசை இருந்ததாக சொல்லப்படும் இடத்தை எதிரி இளங்கோ என்ற நபருக்கு கிரையம் ஏற்படுத்தி அதில் சாட்சி கையொப்பம் செய்ததால் எதிரி மீது கோபம் என்றால் சரிதான்.

2. நாங்கள் இளங்கோ மற்றும் நாச்சியப்பன் மீது தேவகோட்டை உரிமையியல் நீதிமன்றத்தில் நாங்கள் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது. அந்த வழக்கில் நாச்சியப்பன், இளங்கோ என்ன சொல்லியுள்ளாார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த குடிசைக்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் இல்லை, அப்போதுதான் கட்டப்பட்டது, நான்கு குடிசை கட்டியதில் ஒன்றை எரித்துவிட்டார். அந்த சொத்துக்கு பட்டா எங்கள் பெயரில் இருந்ததா என்றால் இருந்தது, என் மாமானர் சாமியய்யா பெயரில் இருந்தது. நான் குறிப்பிட்டுள்ளது போல் எதிரி எந்த குற்றமும் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.